## நான்காம் பகுதி

**இலங்கை மத்திய வங்கியினதும் வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றிய 1983ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்.**


1. *1983ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்* ... (i)

2. *1983ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்* ... (v)

3. *1983ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்த)ச் சட்டம்* ... (vi)

4. *1983ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்த)ச் சட்டம்* ... (xi)

5. *1983ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க, பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகளும், பிணைப்பொறுப்புக்களும் (திருத்த)ச் சட்டம்* ... (xix)

6. *1983ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்* ... (xx)

7. *1983ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க, புனர்வாழ்வு அறவீட்டுச் சட்டம்* ... (xxiv)

# 1983ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

*[1983, ஏப்ரில் மாதம் 20ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1983 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடுசெய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ வெளிநாடுகளிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும். அந் நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த சில முயற்சிகள் தொடர்பில் நிதி ஏற்பாடுசெய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு, குறித்த நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறெதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச் செய்வதற்கும் திரட்டு நிதியத்திற்கு அப்பணங்களைத் திருப்பிக்கொடுப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், முற்கூறிய கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமான ஒரு சட்டம்.**

**1.** இச்சட்டம் 1983 ஆம். ஆண்டின் 15 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டத்தில், "நிதியாண்டான 1983 ஆம் ஆண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும் 1983 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந்தேதி தொடங்கி 1983ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலத்துக்கான சேவைக்காக மூவாயிரத்து எண்நூற்றி ஐம்பத்தி ஏழுகோடி தொண்நூற்று எட்டு இலட்சத்து நாற்பத்தோராயிரம் ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது, செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி,—

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென இத்தால்அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்தும், அத்துடன்

(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ, வெளிநாட்டிலோ திரட்டப்படவேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியிலிருந்தும்,

பெறப்படல் வேண்டும்.

எவ்வாறுயினும், அத்தகைய வரும்படியின் கூட்டுமொத்தத் தொகையானது இரண்டாயிரத்து ஐந்நூற்றி முப்பத்தி ஏழு கோடி எண்பது இலட்சம் ரூபாவினை விஞ்சுதலாகாது.

இதன்கண், முன்னர் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள மூவாயிரத்து எண்நூற்றி ஐம்பத்தி ஏழுகோடி தொண்நூற்று எட்டு இலட்சத்து நாற்பத்தோராயிரம் ரூபா கொண்ட பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அரசாங்கத்துக்காகவும், அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு பங்கமின்றி பயனுடையனவாதல்வேண்டும்.

3. (1) நிதியாண்டான 1983ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இராண்டாம் அட்டவணையின் 1ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் அரசாங்கம் பெறும் வரவுகள், அத்தகையமுயற்சியின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வரவு வைக்கப்படும் வரவுகளின் கூட்டுமொத்தத் தொகையானது, அந்த அட்டவணையின் 3 ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லையிலும் பார்க்கக் குறைந்ததாக இருத்தலுமாகாது. அத்தகைய முயற்சியின் தேறிய மேன்மிகை ஏதேனு'மிருப்பின், அத்தேறிய மேன்மிகையானது, பின்வரும் கட்டணங்களை, அவையாவன-

(அ) முயற்சியினது வருமானத்திற்கு முறைப்படி சாட்டுதல் செய்யப்படற்பாலனவான, கொடுக்கப்பட்டவையாயினுஞ்சரி அல்லது சேர்மானமானவையாயினுஞ்சரி முயற்சியினது தொழிற்பாட்டு, தாபன, மற்றும் ஏனைய செலவுகள் அத்துடன்

(ஆ) முயற்சியினது அசைவுள்ளனவும், அசைவற்றனவுமான சொத்தினது தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு,

என்பனவற்றை அத்தகைய முயற்சியின் வருமானத்தில் எதிரீடு செய்த பின்னர், நிதியாண்டான 1983 ஆம் ஆண்டு முடிவுற்ற பின்னர் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், திரட்டிய நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) நிதியாண்டான 1983 ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1ஆம் நிரையிற்குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொருமுயற்சியின்பேரில், அரசாங்கத்தால் உறப்படும் செலவினம், அந்த நிதி ஆண்டின்போது அத்தகைய முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் வரவுகளிலிருந்து கொடுபடுதல் வேண்டும்; ஆனல், அத்தகைய செலவினம் அந்த அட்டவணையின் 2ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது.

(3) நிதியாண்டான 1983 ஆம் ஆண்டின் முடிவில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் நிலுவையாகவுள்ள பற்றுமீதி, அந்த அட்டவணையின் 4 ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது; அத்துடன், அந்த நிதியாண்டின் முடிவில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புக்கள், அந்த அட்டவணையின் 5 ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது.

4. நிதியாண்டான 1983 ஆம் ஆண்டின்போது எப்போதேனும், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சிகளிலிருந்து அரசாங்கம் பெறும் வரவுகள், அத்தகைய முயற்சியின் மீது அரசாங்கத்தினல் உறப்பட்ட செலவினங்களுக்குப் போதியனவாயிராவிடின், அமைச்சர், அத்தகைய செலவினத்திற்கு அவசியமென அவர் கருதும்அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்துக்குச் சேர்ந்த அல்லதுஅதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லதுக

பணங்களிலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டுமெனக் காலத்துக்குக்காலம் கட்டளை மூலம் பணிக்கலாம். எவ்வாறாயினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத்தொகைகளின் கூட்டு மொத்தத்தொகை, அந்த அட்டவணையின் 2ஆம் நிரையிலுள்ள அதன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். அத்தகைய முயற்சி சம்பந்தமாக அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை அமைச்சராற் கட்டளை மூலம் பணிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் திரட்டு நிதியத்துக்கு மீண்டும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

DISCARDED

5. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனாக அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப்பின் கீழும் தோன்றும் எந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் மீண்டுவருஞ் செலவினத்திற்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்து, ஆனால் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவு செய்யப்படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரின் கட்டளை மூலம், அந் நிகழ்ச்சித் திட்டத்திற்குட்பட்ட ஆக்கப்பொருட் செலவினத்திற்கெனச் செய்யும் பகிர்வுக்கு அல்லது அத்தலைப்பிற்குட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்வரும் மீண்டுவருஞ் செலவினம் அல்லது ஆக்கப்பொருட் செலவினம் என்ற பகிர்வுக்கு மாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின் கீழுள்ள நிகழ்ச்சித்திட்டமெதன் கீழும் ஆக்கப்பொருட் செலவுக்குப் பகிரப்பட்டுள்ள பணங்களெதுவும் அப்பகிர்விலிருந்து வேறெதற்கும் மாற்றப்படல் ஆகாது.

6. (1) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் வரவுகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கென எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகைகளையும்விடக் குறைவாயிருக்குமென அல்லது (2) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாவென,

அமைச்சர் திருப்திப்படுமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழான செலவினத்திற்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப்பெறலாம்.

7. இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 2 ஆம் நிரையிலும் 4 ஆம் நிரையிலும் 5 ஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும் அல்லது- 3 ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளுள் எதனையும், அமைச்சர் அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு 1984 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்

கட்டளை மூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்- அத்தகைய கட்டளை எதுவும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன்கண் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடியதும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதிக்கு முந்தியதுமான அத்தகைய தேதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படல்வேண்டும்.

8. பாராளுமன்றமானது. தீர்மானத்தின் மூலம் இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையை, அவ் அட்டவணையின் தோதான நிரைகளுக்கு ஏதேனும் முயற்சியையும் அத்தகைய முயற்சி தொடர்பிலான எல்லா ஆக்கக்கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும் அல்லது ஆகக்குறைந்த எல்லையையும் சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.

9. *1983*, சனவரி மாதம் *01* ஆந் தேதி தொடங்கி இச்சட்டம் தொடங்கிய தேதிக்கு உடன்முன்னரான நாளன்று முடிவடையும் காலப்பகுதியின் சேவைக்கு நிதி ஏற்பாடுசெய்யும் *1982*, நவம்பர் மாதம் இரண்டாம் நாளில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், எது எப்படியிருப்பினும்-

(அ) அத்தீர்மானத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எத்தலைப்பின் கீழும் தோன்றும் எந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள எப்பணத்திலிருந்தும் அக்காலப்பகுதியின்போது செலவு செய்யப்பட்டுள்ள எத்தொகைகளும் எல்லா நோக்கங்கட்கும் அத்தீர்மானத்தின் அதிகாரத்தின் கீழ்ச் செலவழிக்கப்பட்டனவாகக் கருதப்படாது இச் சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் செலவழிக்கப்பட்டனவாகக் கருதப்படல்வேண்டும்;

(ஆ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடனடுத்து முன்னுள்ள நாளில் செலவழிக்கப்படாதுள்ள அவ்வாறொதுக்கப்பட்ட எவையேனும் பணங்கள் எல்லா நோக்கங்கட்கும் இச்சட்டத்தின் கீழ் நேரொத்த தலைப்பின் கீழ்க் காணப்படும் அத்தகைய நேரொத்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்துடன் சேர்க்கப்பட்டவையாகக் கருதப்படல் வேண்டும்; அத்துடன்

(இ) அத்தீர்மானத்தின் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சேவைகள் சம்பந்தமாக *1983*, சனவரி மாதம் *01* ஆந் தேதியன்று தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு உடனடியாக முன்னருள்ள நாளன்று முடிவடையும் காலப்பகுதியின்போது, திரட்டு நிதியத்திலிருந்து முற்பணமாகச் செலுத்தப்பட்டுள்ள எத்தொகையும் எல்லா நோக்கங்கட்கும் அத்தீர்மானத்தின் அதிகாரத்தின் கீழ் அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படவில்லையெனவும், ஆனல், இச்சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்டதெனவும் கருதப்படல் வேண்டும்.

## 1983ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்

[*1983, ஜூன் மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட*]

**1978ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 1983 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக் குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''அத்தகைய துறைகளை'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''அத்தகைய துறைகளை அல்லது முகவர் நிலையங்களை'' என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதாம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச்சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப் படுகின்றது:-

(அ) ''இ என்னும் அட்டவணையில்'' என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக ''இ என்னும் அட்டவணையில் அல்லது ஈ என்னும் அட்டவணையில்'' என்ற சொல்லமைப்புக்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(ஆ) ''வலயமொவ்வொன்றிலும் பயனுறுதல் வேண்டும்'' என்ற சொற்களுக்குப் பதிலாக பின்வருதனை இடுவதன் மூலம்;-

''வலயமொவ்வொன்றிலும் பயனுறுதல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறுயினும், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் சபையுடனான கலந்தாலோசனையுடனும் அதன் ஒருப்பாட்டுடனும் அன்றி, துணைவிதி ஒழுங்குவிதி, கட்டளை அல்லது அறிவிப்பு எதுவும் ஆணைக் குழுவினால் அச் சட்டத்தின் கீழ் ஆக்கப்படுதலோ அல்லது விடுக்கப்படுதலோ அல்லது ஏதேனும் தத்துவம் அல்லது பணி ஆணைக் குழுவினால் அச்சட்டத்தின் கீழ் பிரயோகிக்கப்படுதலோ அல்லது நிறைவேற்றப்படுதலோ ஆகாது.''

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ''ஐந்து ஆண்டுக்காலத்தினுள்'' என்ற சொற்களுக்குப் பதிலாக, ''மூன்று ஆண்டுக் காலத்தினுள்'' என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. அட்டவணை இ என்பதை உடனடுத்துப் பின்னர், முதன்மைச் சட்ட வாக்கத்துக்கான அட்டவணை ஈ எனப் பயனுறவேண்டிய பின்வரும் புதிய அட்டவணையைச் சேர்ப்பதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கமானது இத்தால் திருத்தப்படுகின்றது:-

## 1983ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்த)ச் சட்டம்

*[1983 ஒத்தோபர் மாதம் 07ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

### 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*1.* இச்சட்டமானது *1983*ஆம் ஆண்டின் *39*ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் 10ஆம் பிரிவு, ''இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவணை தவறியவராகக் கருதப்படுதல் வேண்டும்.'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவணை தவறியவராகக் கருதப் படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் முந்திய காலாண்டுக்காக ஏதேனும் தொழிலின் மொத்த விற்பனை வரவு நூற்றைம்பது லட்சம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து, அடுத்துவரும் காலாண்டு தொடர்பில் கொடுபடற்பாலதான மொத்த விற்பனை வரவு வரி பின்வரும் முறையில் கொடுக்கப்படுதல் வேண்டும்:—

(அ) முன்னைய காலாண்டுக்காகக் கொடுபடற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியின் மூன்றிலொன்று அடுத்துவரும் காலாண்டின் இரண்டாவது மாதத்தில் வரும் பதினைந்தாம் நாளுக்குப் பிந்தாமல் கொடுக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) முன்னைய காலாண்டுக்காகக் கொடுபடற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியின் மூன்றிலொன்று அடுத்துவரும் காலாண்டின் மூன்றாவது மாதத்தில் வரும் பதினைந்தாம் நாளன்று அல்லது அதன் முன்னர் கொடுக்கப்படுதல் வேண்டும் ;

(இ) பந்தி (அ), பந்தி (ஆ) என்பவற்றின் கீழ் கொடுக்கப்பட்டனவான தொகைகளைக் கழித்தபின்னர் அடுத்துவரும் காலாண்டுக்காகக் கொடுபடற்பாலதான மொத்த விற்பனை வரவு வரி அக்காலாண்டு முடிவடைந்ததை அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்குப் பிந்தாமல் கொடுக்கப்படுதல் வேண்டும்.

அவ்வாறு செலுத்தப்படாத ஏதேனும் வரி, தவணை தவறியதாகக் கருதப் படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரியானது எந்த ஆளால் செலுத்தப் படற்பாலதோ அந்த ஆள் அல்லது அத்தகைய வரியானது ஒருவருக்கு அதிகமான ஆட்களால், அல்லது பங்குடைமை ஒன்றினால் செலுத்தப்படற்பாலதாயுள்ளவிடத்து, அப்போது அத்தகைய ஆட்களுள் ஒவ்வொவரும், அத்துடன் பங்குடைமையிலுள்ள ஒவ்வொரு பங்காளியும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவணை தவறியவராகக் கருதப்படுதலும் வேண்டும்.''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவு, ''இப்பிரிவில் எது எவ்வாறிருப்பினும்,'' என்பது தொடங்கி அப்பிரிவு முடியவுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''இப்பிரிவில் எது எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதியானவர் தொழில்களின் வெவ்வேறு வகுப்புக்களின் அல்லது விவரணங்களின் தன்மையைக் கருத்துட்கொண்டு, அவ்வகுப்பை அல்லது விவரணத்தைச் சார்ந்த ஏதேனும் தொழிலில் கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட வேண்டிய படிவத்தையும் முறையையும் விதித்துரைக்கலாம். ஒருதொழிலில் கொடுக்கல்வாங்கல்கள் பதிவு செய்யப்படவேண்டிய படிவத்தையும் முறையையும் ஆணையாளர் தலைமையதிபதி விதித்துரைக்கின்றவிடத்து, மொத்த விற்பனை வரவு வரி அறவிடப்பட வேண்டியவரும் அத்தொழிலைக் கொண்டு நடாத்துகின்றவருமான ஒவ்வோர் ஆளும் அத்தொழிலின்போது அவரால் செய்துகொள்ளப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலையும் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும் பதிவு செய்தல் அல்லது பதிவு செய்வித்தல் வேண்டும். அத்தகைய பதிவேடு அது எக்காலாண்டில் தயாரிக்கப்பட்டதோ அக்காலாண்டு முடிவடைந்ததன் பின்னர் ஐந்தாண்டுக் காலப்பகுதிக்கு, அப்பதிவேடு எவரால் அல்லது எவர் சார்பில் தயாரிக்கப்பட்டதோ அவரினால் வைத்திருக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஆம் பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) ''அந்தத் தொழிலைக்கொண்டு நடாத்துகையில், அவரால் செய்து கொள்ளப்படும்'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''அந்தத் தொழிலைக் கொண்டு நடாத்துகையில், ''அவரால் இன்னொரு பதிவுசெய்யப்பட்டுள்ள உற்பத்தியாளருடன் செய்து கொள்ளப்படும்'' என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (உ), (ஊ) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின் வரும் பந்திகளை இடுவதன்மூலமும் :—

''(உ) வழங்கப்பட்ட பொருள்களின் தொகையும் மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப்படுவதற்கு முன்னர். ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலும் கிடைக்கப்பெற்ற அல்லது கிடைக்கப் பெறற்பாலதான பணத்தொகையும் ;

(ஊ) விற்பனை நிலையின்போது மாத்திரம் அத்தகைய ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் ஏற்றிக் கூறப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரி ; அத்துடன்

(எ) கொடுக்கல் வாங்கலானது அவரால் இறக்குமதி செய்யப்பட்டு எச்செய்முறைக்கேனும் உட்படுத்தப்படாது விற்பனை செய்யப் பட்ட பொருளொன்று தொடர்பிலானதாக இருக்குமிடத்து,

அக்கொடுக்கல் வாங்கலினுல் மேவப்பட்ட பொருள்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான, பிரதான சுங்கச் சேகரிப்பாளருக்குக் கொடுக்கப்பட்ட மொத்த விற்பனை வரவு வரித்தொகை.''.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48ஆம் பிரிவானது, "செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்தும் அவ்வாருகவும் அது கழிக்கப்படுதல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்தும் அவ்வாருகவும் அது கழிக்கப் படுதல் வேண்டும் :

ஆயின் —

(அ) அத்தொழிலில் பயன்படுத்தப்படும் ஏதேனும் பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி, இணைப்புகள், கட்டிடங்கள், வாகனங்கள் அல்லது வேறு மூலதனச் சொத்துக்கள் தொடர்பிலான வரிக்குக் கழிப்பனவு எதுவும் செய்யப்படுதல் ஆகாது ;

(ஆ) நான்காம் பிரிவின்கீழ் மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் தொழிலில் பயன்படுத்தப்படும் அல்லது விலக்களிக்கப்பட்ட பொருள்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் பொருள்கள் தொடர்பில் கழிப்பனவு எதுவும் செய்யப்படுதல் ஆகாது ; அத்துடன்

(இ) இலங்கைக்கு வெளியே உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் பொருளை இறக்குமதி செய்கின்றவரும் உற்பத்திச் செய்முறை எதற்கும் அதனை உட்படுத்தாது விற்பனை செய்கின்றவருமான ஆளெவரும், இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளில் உள்ளது எது எப்படியிருப்பினும், 1983 பெப்புருவரி 19ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் இப்பிரிவின் நோக்கங்களுக்காக உற்பத்தியாளர் ஒருவராகக் கருதப் படமாட்டார்.''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில், "(6)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக'', என்னுஞ் சொல்லமைப்புக்குப் பதிலாக "(5)ஆம் உட்பிரிவினதும் (6)ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளுக்கமைவாக'' என்னுஞ் சொல்லமைப்பை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவினை இடுவதன்மூலமும் :—

"(4) ஐந்தாம் உட்பிரிவினதும் (6)ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, ஏற்றுமதியாளரே இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அல்லது தயாரிக்கப்படும் ஏதேனும் பொருளின் உற்பத்தியாளராக அல்லது தயாரிப்பாளராக இருக்கின்ருரெனவும் —

(i) அவரால் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களைத் தயாரிப்பதில் அத்தகைய ஏற்றுமதியாளரால் பயன்படுத்தப்பட்ட அத்தகைய மூலப்பொருள்கள் தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரி, உண்மையில் ஏற்றுமதியாளரால் பிரதான சுங்கச் சேகரிப்பாளரிடம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் ; அல்லது

(ii) (அ) அத்தகைய பொருளின் உற்பத்திக்கென அல்லது தயாரிப்புக்கென ஏற்றிக் கூறப்படற்பாலனவான அத்தகைய மூலப் பொருட்களின் கொள்வனவுக்கென அத்தகைய ஏற்றுமதி யாளரால் செலுத்தப்பட்ட விலை அத்தகைய மூலப்பொருட்கள் எந்த உற்பத்தியாளரிடம் அல்லது தயாரிப்பாளரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டனவோ அந்த உற்பத்தி யாளருக்கு அல்லது தயாரிப்பாளருக்குச் செலுத்தப்பட்ட தெனவும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய மூலப்பொருட்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பால தான அந்த உற்பத்தியாளரின் அல்லது தயாரிப்பாளரின் தொழிலின் மொத்த விற்பனை வரவு தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரி உண்மையில் அத்தகைய மூலப்பொருட்களின் உற்பத்தியாளராலேயே அல்லது தயாரிப்பாளராலேயே செலுத்தப்பட்டதெனவும்,

ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்பட்டவிடத்து, அத்தகைய பொருளின் உற்பத்தியில் அல்லது தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியின் அத்தகைய தொகை, ஆணையாளர் தலைமையதிபதியால் அத்தகைய ஏற்றுமதியாளருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.'' ;

(3) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் :—

''(5) மூன்றும், நாலாம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் —

(அ) ஏதேனும் காலப்பகுதிக்கு தள்ளுபடியொன்று கோரப்படற்பாலதான பொருள் ஒன்றென, 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தவிசாளரால் கசெற்றில் வெளியிடப்பட்ட, பொருள் ஒன்று தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரி செலுத்தப் பட்டதாயின் அக்காலப்பகுதிக்கு ஏற்றுமதியாளர் ஒருவருக்கு ஏற் புடையனவாகா ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட பொருளொன்று ஏற்றுமதி செய்யப்பட்ட ஏதேனும் கொள்கலன், பாத்திரம் அல்லது சுற்றுறை தொடர்பில் அவ்வேற்பாடுகளில் ''பொருள்'' பற்றிய குறிப்பீடுகள்

யாவும் விடயத்துக்கேற்றுற்போல, அத்தகைய கொள்கலன், பாத்திரம் அல்லது சுற்றுறை பற்றிய குறிப்பீடுகளென்றுற்போன்று அதே முறையில் ஏற்புடையனவாதல் வேண்டும்.''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், அதற்கான காப்புவாசகத்தில், ''ஐந்து இலட்சம் ரூபாவை'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''ஓர் இலட்சம் ரூபாவை'' என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், —

(அ) அவ்வுட்பிரிவின் (ii)ஆம் பந்தியில், ''வழங்குவதற்கான ஏதேனும் ஒப்பந்தம் ; அல்லது'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''வழங்குவதற்கான ஏதேனும் ஒப்பந்தம்;'' என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (iii)ஆம் பந்தியில் ''தொடர்பிலான ஏதேனும் கீழொப்பந்தம்'', என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, தொடர்பிலான ஏதேனும் கீழொப்பந்தம், அல்லது என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் :

(இ) அவ்வுட்பிரிவின் (iii) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும் :—

'' (iv) களியாட்டக்காரர் அல்லது கலைத்தொழிலர் ஒருவரின் சேவைகள் தொடர்பிலான அல்லது உசாத்துணைச் சேவைகள் தொடர்பிலான ஏதேனும் ஒப்பந்தம்,''.

8. (1) இச்சட்டத்தின் 5ஆம் பிரிவினலும் 6ஆம் பிரிவினலும் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்காகவும் 1981 நவம்பர் 12ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் செயற்பாடு காரணமாக ஏதேனும் வரி கொடுபடற்பாலதானதாக வருமிடத்து அத்தகைய வரியானது இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாகச் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத ஏதேனும் வரி, தவணை தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரியானது எந்த ஆளால் செலுத்தப்படற்பாலதோ அந்த ஆள் அல்லது ஏதேனும் வரியானது ஒருவருக்கு அதிகமான ஆட்களால் அல்லது பங்குடைமை ஒன்றினல் செலுத்தப்படற்பாலதாயுள்ளவிடத்து, அப்போது அத்தகைய ஆட்களுள் ஒவ்வொருவரும், அத்துடன் பங்குடைமையிலுள்ள ஒவ்வொரு பங்காளியும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவணை தவறியவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

# 1983 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்த)ச் சட்டம்

*[1983, ஒத்தோபர் மாதம் 19 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம், 1983 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்த)ச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், அப்பந்தியின் முடிவில் பின்வரும் உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(xli) 1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக் கழகச் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பௌத்த, பாளி பல்கலைக் கழகத்தின் அத்துடன் ஏதாவது உயர் கல்வி நிறுவனத்தின்;

(xlii) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின்;

(xliii) சருவதேச நீர்ப்பாசன முகாமை நிறுவனத்தின்;

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட் பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் "உலக உல்லாசப் பிரயாண அமைப்பினுல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உலக உல்லாசப் பிரயாண அமைப்பினுல், சர்வதேச நீர்ப்பாசன நிறுவகத்தினுல் அல்லது கொழும்புத் திட்ட பணியகத்தினுல்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

(2) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ஔ) இலங்கையில் வதியும் எவரேனும் தனியாளால் அல்லது தனியாளுக்கு—

(அ) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அவரால் புரியப்பட்ட சேவைகள் தொடர்பில்; அல்லது

(ஆ) அவரால் அல்லது அவரது வாழ்க்கைத் துணையினுல் புரியப்பட்ட கடந்தகால சேவைகள் தொடர்பில்,

அவரால் அல்லது அவரது வாழ்க்கைத் துணையினுல் கொண்டு நடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் ஏதேனும் ஊழியத்தின்போது அந்த வரி

மதிப்பீட்டாண்டில் இலங்கைக்கு வெளியே வெளிநாட்டுச் செலாவணியில் சம்பாதிக்கப்பட்ட வேதனங்கள் அல்லது எழுகின்ற ஒய்வூதியம் அவருக்கு இலங்கையில் செலுத்தப்படின் அல்லது அத்தகைய வேதனங்கள் அல்லது ஒய்வூதியம் (நியாயமான செலவு என்று ஆணையாளர் தலைமையதிபதியால் கருதப்படுகின்றவாறு அத்தகைய தனியாளினல் இலங்கைக்கு வெளியே செல விடப்பட்ட அத்தகைய தொகையைக் கழித்து) அவரால் இலங்கைக்கு அனுப்பப்படின், அத்தகைய வேதனங்கள் அல்லது ஒய்வூதியம்.''.

4. முதன்மைச் சட்ட வாக்கத்தின் 15 ஆம் பிரிவு அப்பிரிவின் (ஔ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்ட வாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(1) கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கம்பெனியினல் கொண்டு நாடாத்தப்பட்டதும், இப்பிரிவு ஏற்புடைத்தாகும் ஒரு பொறுப்பு முயற்சியென கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அமைச்சரினல் அங்கீகரிக்கப்பட்டவாறுனதுமான அத்தகைய ஏதேனும் பொறுப்பு முயற்சியின் ஏற்றுமதி இலாபங்களையும் வருமானத்தையும் கொண்டுள்ளவாறுன அக்கம்பெனியின் இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகமானது—

(அ) 1972 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கூட்டிணைக்கப்பட்டதும் 1978 நவம்பர் 15 ஆம் தேதிக்கு முன்னர் 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உண்ணுட்டர சிறைச் சட்டத்தின் 7 அ என்னும் பிரிவின் கீழ் அமைச்சரினல் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒரு கம்பெனியின் விடயத்தில், அத்தகைய கம்பெனி கூட்டிணைக்கப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட எட்டாண்டுக் காலப்பகுதிக்கு;

(ஆ) 1972 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்—

(i) விற்பனைப் பொருள்கள் எவற்றையும் உற்பத்தி செய்வதற்கென கூட்டிணைக்கப்பட்டதும் 1978, நவம்பர் 15 ஆம் தேதியின் பின்னர் கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சரினல் அங்கீகரிக்கப்பட்டதுமான; அல்லது

(ii) வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு செய்வதற்காக எவையேனும் சேவைகளை ஏற்பாடு செய்வதற்கென கூட்டிணைக்கப்பட்டதும் 1978 நவம்பர் 15 ஆம் தேதியின் பின்னர் ஆனல் 1983 மார்ச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சரினல் அங்கீகரிக்கப்பட்டதுமான,

கம்பெனியொன்றின் விடயத்தில், அக்கம்பெனியானது வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவு செய்வதற்காக அதன் முதலாவது ஏற்றுமதிகளைச் செய்த தேதியிலிருந்து அல்லது சேவைகளை ஏற்பாடு செய்யத் தொடங்கிய தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட ஐந்தாண்டு காலப்பகுதிக்கு, வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்;

ஆயின், ஏதேனும் கம்பெனியால் கொண்டு நடாத்தப்படும் ஒரு பொறுப்பு முயற்சி தொடர்பாக அது—

(i) வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு செய்வதற்காக விற்பனைப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கென அல்லது சேவைகளை ஏற்பாடு செய்வதற்கென முன்னரே உளதாயிருந்த ஏதேனும் தொழிலைப் பிரிப்பதன் மூலம் அல்லது புனர்நிர்மாணம் செய்வதன் மூலம் அமைக்கப்பட்ட ஒரு பொறுப்பு முயற்சியாக விருப்பின்;

(ii) அப்பொறுப்பு முயற்சியின் ஏற்றுமதி மொத்த விற்பனை வரவின் ஏதேனும் பாகம் வேறு ஏதேனும் பொறுப்பு முயற்சியினது வியாபாரம் அல்லது தொழில் முழுவதும் அல்லது அதன் பாகமொன்று அப்பொறுப்பு முயற்சியின் வியாபாரத்துடன் அல்லது தொழிலுடன் இணைந்ததன் விளைவாக எழுந்ததாயின்,

அத்தகைய கம்பெனிக்கு இவ்வுட் பிரிவு ஏற்புடையதாதலாகாது.''; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

'(ஆஆ) ''உற்பத்தி'' என்பது 1983 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டு தொடர்பாக பழங்கள், காய்கறிகள், மலர்கள் அல்லது அலங்காரச் செடிகள் ஆகியவற்றின் வளர்ப்பை உள்ளடக்கும்.'.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஈ என்னும் பிரிவை உடனடுத்து பின்வரும் பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச் சட்டவாக்கத்தின் 22ஈஈ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

22ஈஈ. (1) (i) 1983 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் கூட்டிணைக்கப்பட்டதும் அரசினால் அத்துடன் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினால் பணமாகவோ வேறு வகையாகவோ உதவு தொகையளிக்கப்பட்ட அதன் மூலதனத்தில் தொண்ணூற்றைந்து நூற்று வீதத்துக்கு குறையாது கொண்டதுமான; அத்துடன்

(ii) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட வேறு பகிரங்கக் கம்பெனிகளின் பங்குகளைக் கொள்வனவு செய்தலையும் கையாள்வதையும் அதன் பிரதான குறிக்கோளாக் கொண்டதுமான,

UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI LANKA

ஏதேனும் பகிரங்கக் கம்பெனியின் இலாபங்களும் வருமானமும், அத்தகைய இலாபங்களும் வருமானமும் அத்தகைய கம்பெனியால், அத்தகைய இலாபங்களும் வருமானமும் எந்த வரிமதிப்பீட்டு ஆண்டில் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனவோ அந்த வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து ஆகக் குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்காவது வைத்திருக்கப்படின், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவையும் ஏதேனும் கம்பெனியால் வைத்திருக்கப்பட்டவையுமான இலாபங்களும் வருமானமும், அத்தகைய கம்பெனி கூட்டிணைக்கப்பட்ட தேதியை உடனடுத்து வரும் மார்ச்சு மாதத்தின் முப்பத்தோராம் தேதியன்று உள்ளவாறுன அத்தகைய கம்பெனியின் செலுத்திய மூலதனத்தின் இரு மடங்கிற்குச் சமமான பணத்தொகையொன்ருக இருக்கும்போது, அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விலக்களிப்பு இல்லாதொழிதல் வேண்டும்.

(3) ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டில் ஏதேனும் கம்பெனியால் வைத்திருக்கப்பட்டவையும் இப்பிரிவின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவையுமான இலாபங்களினதும் வருமானத்தினதும் ஏதேனும் பாகம் அவ்வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் அத்தகைய கம்பெனியின் பங்குதாரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுமாயின், இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் முரணுக எது எவ்வாறிருப்பினும், அவ்விதம் பகிர்ந்தளிக்கப்பட்ட இலாபங்களினதும் வருமானத்தினதும் மீது அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கு கம்பெனியால் வருமான வரி செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரி, வரி மதிப்பீடு செய்யப்படற்பாலதாதலும் செலுத்தப்படற்பாலதாதலும் அத்துடன் அறவிடப்படற்பாலதாதலும் வேண்டும்.''.

7. முதன்மைச் சட்ட வாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், (அ) என்னும் பந்தியில் ''இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ்'' என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக ''இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் அல்லது 16 அ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22 அ என்னும் பிரிவின்கீழ் அல்லது 22 ஆ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22 இ என்னும் பிரிவின்கீழ் அல்லது 22ஈ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22ஈஈ என்னும் பிரிவின் கீழ்'' என்னும் சொல்லமைப்மை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

''(4 அ) எந்த வரிமதிப்பீட்டாண்டின் போது விலக்களிக்கப்பட்ட காலப்பகுதி முடிவடைகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு, 16ஆ என்னும் பிரிவில் அல்லது 20 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும்

பொறுப்பு முயற்சியொன்றைக்கொண்டு நடாத்துகின்ற ஆளொருவரின் வரிமதிப்பிடற்குரிய வருமானத்தைக் கணிப்பதில் விலக்களிக்கப்பட்ட காலப்பகுதியின் போது உறப்பட்ட நட்டங்களின் மொத்தத் தொகை அதிலிருந்து பின் வருவனவற்றின் கூட்டு மொத்தத்தைக் கழித்த பின்னர் கழிக்கப்படுதல் வேண்டும்:-

(i) எந்தக் கணக்கீட்டுக் காலப் பகுதியில் அத்தகைய நட்டம் உறப் பட்டதோ அந்தக்கணக்கீட்டுக் காலப்பகுதியை அடுத்துறும் ஏதேனும் கணக்கீட்டுக் காலப் பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டிருந்தவாறான அப்பொறுப்பு முயற்சியின் அத்தகைய இலாபங் களும் வருமானமும்; அத்துடன்

(ii) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் அவ்வாளின் மொத்த நியதிச் சட்டமுறையான வருமானத்திலிருந்து கழிக்கப் பட்டதான அப்பொறுப்பு முயற்சியில் உறப்பட்ட அத்தகைய நட் டங்களின் அத்தகைய பாகம்.

இவ்வுட்பிரிவில், 16ஆ என்னும் பிரிவில் அல்லது 20ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பொறுப்பு முயற்சியொன்று தொடர்பில் ''விலக்களிக்கப்பட்ட காலப் பகுதி'' என்பது, அப் பொறுப்பு முயற்சியின் இலாபங்களும் வருமானமும் எந்தக் காலப் பகுதியின்போது வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டனவோ அந்தக் காலப்பகுதி என்று பொருள்படும்.''.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாக பின் வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

''(ஆ) பணமாகவோ வேறு வகையாகவோ—

(i) இலங்கை அரசாங்கத்துக்கு;

(ii) உள்ளூர் அதிகார சபையொன்றுக்கு;

(iii) 1978ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங் கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக் கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் உயர்கல்வி நிறு வனத்துக்கு;

(iv) 1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, பௌத்த பாளி பல்கலைக் கழகச் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பௌத்த, பாளி பல்கலைக் கழகத்துக்கு அல்லது ஏதாவது உயர் கல்வி நிறுவனத்துக்கு;

(v) அரசாங்கத்தினுல் தாபிக்கப்பட்ட நிதியமொன்றுக்கு;

(vi) உள்ளூர் அதிகார சபையொன்றினுல் தாபிக்கப்பட்டதும் அமைச்சரினுல் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒரு நிதியத்துக்கு,

அளிக்கப்பட்ட நன்கொடையொன்று.'';

(ஆ) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், ''செலவு செய்யப்பட்டதென தேசிய வீடமைப்பு ஆணையாளரால் சான்றுபடுத்தப்பட்டதான'' என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக, ''செலவு செய்யப்பட்ட'' என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(இ) அந்த உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

''(ஏஏ) 23 ஆம் பிரிவின் கீழ் விடுதொகையொன்று வழங்கப்படும் கட்டுப்பணமாக இராத, குழப்பத்துக்கு அல்லது உள்நாட்டுக்கலகத்துக்கு எதிரான காப்புறுதிப்பத்திரம் ஒன்றன் மீது தனியாள் ஒருவரால் செலுத்தப்பட்ட ஏதேனும் கட்டுப் பணம்''.

(ஈ) அவ்வுட்பிரிவின் (க) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:-

(க) எவரேனும் ஆளினுல்,-

(i) பிரிவு 16அ வின்கீழ் அல்லது 22ஈ என்னும் பிரிவின்கீழ் 1983 மார்ச் 31 ஆம் தேதிக்கு முன்னர் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட, அல்லது

(ii) பிரிவு 22ஆ வின் கீழ் 1983 மார்ச்சு 31ஆம் தேதிக்கு முன் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள,

ஐம்பதுகோடி ரூபாவை விஞ்சுகின்ற மூலதனத்தையுடையதுமான கம்பெனியொன்றில் உளதாயுள்ள பங்குகளைத் தவிர, சாதாரணப் பங்குகளின் கொள்வனவில் முதலீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக ''மூலதனம்'' என்பது, 18 என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவிலுள்ளவாறுன அதே பொருளைக்கொண்டிருத்தல் வேண்டும்.'' அத்துடன்.

(ங) 1983, யூலை, 24 ஆம் தேதிக்கு பின்னரும் 1983 ஒகத்து 24 ஆம் தேதிக்கு முன்னரும் குழப்பத்தினுல் அல்லது உள்நாட்டுக் கலகத்தினுல் சேதப்படுத்தப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைப் பழுதுபார்ப்பதற்காக அல்லது

புனருத்தாரணம் செய்வதற்காக ஆள் ஒருவரினல் செலவு செய்யப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ''பாஆதொகைபு'' வினல் அல்லது ''பாஆ தொகைபு'' வின் பணிகளை ஒத்தபணிகளைப் புரியும் அரசாங்கத் திணைக்களமொன்றினல்சான்றுப்படுத்தப்பட்டதும்'பாஆதொகைபு, விடமிருந்தான அல்லது ஏதேனும் அரசாங்க நிதியத்திடமிருந்தான மானியக் கொடையொன்ருகப் பெறப்பட்ட தொகையொன்ருக, அல்லது குழப்பத்தினுலான அல்லது உள்நாட்டுக்கலகத்தினுலான சேதத்துக்கு அல்லது அழிவுக்கு எதிரான காப்புறுதிப்பத்திரமொன்றிலிருந்து பெறப்பட்ட தொகையொன்ருக அல்லது எந்தத் தொகைதொடர்பில் 23ஆம் பிரிவின் கீழ் விடுதொகையொன்று அளிக்கப்பட்டுள்ளதோ அந்தத் தொகையொன்ருக அல்லாததும் ஆன ஏதேனும் தொகை'';

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்-

(அ) ''நான்குக்கு அதிகமாகாத'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பதினென்குக்கு அதிகமாகாத'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) ''ஐந்துக்கு அதிகமான'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பதினைந்துக்கு அதிகமான'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;''

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ''(2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க) என்னும் பந்திகளில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''(2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க), (ங) என்னும் பந்திகளில்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் ''(2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க) என்னும் பந்திகளில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக '' (2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க) (ங) என்னும் பந்திகளில் என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.',

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது-

(அ) அப்பிரிவின் (ய) (ர) என்னும் பந்திகளை முறையே அப்பிரிவின் (ல), (வ) என்னும் பந்திகளாக மீள எழுத்திடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (ம) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:-

''(ய) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு;

(ர) சருவதேச நீர்ப்பாசன முகாமை நிறுவகத்துக்கு;''

10. முதன்மைச் சட்டடவாக்கத்தின் 54 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், ''பல்கலைக் கழகத்துக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக பல்கலைக்கழகத்துக்கு அல்லது 1981 ஆம் ஆண்டின் 74ஆம் இலக்க இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகச் சட்டத்திஞல் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகத்துக்கு அத்துடன் ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்துக்கு'' என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம், இத்தால் திருத்தப்படுகின்றது.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பந்தியில் ''அல்லது அந்த ஆண்டின் ஏப்பிறில் முதலாம் தேதியன்று அதன் சந்தைப் பெறுமதி'' என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, ''அல்லது கொடை அளிக்கப்பட்ட தேதியன்று அதன் சந்தைப் பெறுமதி'' என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் அவ்வுட்பிரிவுக்கான இரண்டாம் காப்பு வாசகத்துக்குப் பதிலாக பின் வரும் புதிய காப்புவாசகத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

''ஆயின் வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி எவரேனும் ஆளிஞல் அல்லது அவர் சார்பில், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக அத்தகைய ஆளிஞல் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரி, செல்வ வரி அல்லது கொடைவரி தொடர்பாக ஏதேனும் மோசடி, தட்டிக்கழித்தல் அல்லது வேண்டுமென்ற தவறுகை புரியப்பட்டுள்ளவிடத்து, அந்த வரிமதிப்பீட்டு ஆண்டின் முடிவின் பின்னர் எந்நேரத்திலும் அத்தகைய ஆளின் மீது வரிமதிப்பீடொன்றை அல்லது மேலதிக வரிமதிப்பீடொன்றைச் செய்வது வரிமதிப்பீட்டாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தில் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிஞல் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்கும் 1983 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

14. பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ''பாஆதொகைபு'' ஆனது, முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்புடைமையின் நோக்கங்களுக்காக அரசாங்க நிறுவனமொன்ருகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் நிதியம் அரசாங்கத்தால் தாபிக்கப்பட்டுப் பேணிவரப்படும் நிதியமொன்ருகக் கருதப்படுதலும் வேண்டும்.

## 1983ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதிகளும், பிணைப்பொறுப்புக்களும், (திருத்தச்) சட்டம்

*[1983, திசெம்பர் மாதம் 14ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதிகளும், பிணைப்பொறுப்புக்களும் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டமானது, 1983ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க, பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகளும், பிணைப்பொறுப்புக்களும் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகளும், பிணைப் பொறுப்புக்களும் கட்டளைச்சட்டமானது, அக்கட்டளைச்சட்டத்தின் 33ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது என்பதுடன், இப்புதிய பிரிவானது அக்கட்டளைச்சட்டத்தின் 33அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

33அ. (1) இக்கட்டளைச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் அல்லது இக்கட்டளைச்சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட ஏதேனும் கட்டளையின் நியதிகள் எது எவ்வாறிருப்பினும், அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் பெறப்பட்ட அல்லது பெறப்படவுள்ள ஏதேனும் கடன் தொடர்பில் கடனுழ் நிதியத்துக்கு அத்தகைய வெளிப்படுத்துகைத் தேதியிலிருந்து பயனுறும் வகையில் உதவுதொகை எதுவும் செலுத்தப்படுதலாகாதென தேசிய பொருளாதார நலன்கருதி வெளிப்படுத்தலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்று செய்யப்படுகின்றவிடத்து, முதிர்வடையும் தனிசு எதனையும் மீட்பதற்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.''.

## 1983ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்.

*[1983, திசெம்பர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1984 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடுசெய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த சில முயற்சிகள் தொடர்பில் நிதி ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு, குறித்த நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச்செய்வதற்கும், திரட்டு நிதியத்திற்கு அப்பணங்களைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், முற்கூறிய கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.**

1. இச்சட்டம் *1983* ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. *(1)* இச்சட்டத்தின். ''நிதியாண்டான *1984* ஆம் ஆண்டு'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதும் *1984* ஆம்ஆண்டு சனவரி மாதம் *01*ஆந்தேதி தொடங்கி *1984*ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் *31* ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலத்துக்கான சேவைக்காக நாலாயிரத்து பதினாறு கோடி ஏழு இலட்சத்து அறுபத்தாறாயிரம் ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது. செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி-

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்தும், அத்துடன்

(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ, வெளிநாட்டிலோ திரட்டப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியிலிருந்தும்,

பெறப்படல் வேண்டும்.

எவ்வாறாயினும் அத்தகைய வரும்படியின் கூட்டுமொத்தத் தொகையானது ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்திநாலுகோடி ரூபாவினை விஞ்சுதலாகாது.

இதன்கண், முன்னர் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள நாலாயிரத்து பதினாறு கோடி ஏழு இலட்சத்து அறுபத்தாறாயிரம் ரூபா கொண்ட பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அரசாங்கத்துக்காகவும், அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி பயனுடையனவாதல் வேண்டும்.

3. *(1)* நிதியாண்டான *1984* ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு

முயற்சியிலிருந்தும் அரசாங்கம் பெறும் வரவுகள், அத்தகைய முயற்சிகளின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வரவுவைக் கப்படும் வரவுகளின் கூட்டுமொத்தத் தொகையானது, அந்த அட்டவணையின் III ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லையிலும் பார்க்கக் குறைந்ததாக இருத்தலுமாகாது. அத்தகைய முயற்சியின் தேறிய மேன்மிகை ஏதேனுமிருப்பின், அத்தேறிய மேன்மிகை யானது, பின்வரும் கட்டணங்கள், அவையாவன-

(அ) முயற்சியினது வருமானத்திற்கு முறைப்படி சாட்டுதல் செய்யப்படற் பாலனவான, கொடுக்கப்பட்டனவாயினுஞ்சரி அல்லது சேர்மானமான வையாயினுஞ்சரி முயற்சியினது தொழிற்பாட்டு, தாபன, மற்றும்ஏனைய செலவுகள், அத்துடன்

(ஆ) முயற்சியினது அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான சொத்தினது தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு

என்பனவற்றை அத்தகைய முயற்சியின் வருமானத்தில் எதிரீடுசெய்த பின்னர், நிதியாண்டான 1984 ஆம் ஆண்டு முடிவுற்ற பின்னர் ஆறு மாதங்கள் முடிவடை வதற்கு முன்னர், திரட்டிய நிதியத்திற்குச் செலுத்தப்படுதல்வேண்டும்.

(2) நிதியாண்டான 1984 ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண் டாம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொருமுயற்சி யின்பேரில், அரசாங்கத்தால் உறப்படும் செலவினம், அந்த நிதி ஆண்டின்போது அத்தகைய முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் வரவுகளிலிருந்து கொடுபடுதல் வேண்டும். ஆனால், அத்தகைய செலவினம் அந்த அட்டவணையின் II ஆம் நிரை யிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது.

(3) நிதியாண்டான 1984ஆம் ஆண்டின் முடிவில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் நிலுவையாகவுள்ள பற்றுமீதி, அந்த அட்டவணையின் IV ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது. அத்துடன் அந்த நிதியாண்டின் முடிவில் அந்த முயற்சியின் மொத்தப்பொறுப்புகள், அந்த அட்டவணையின் Vஆம் நிரைவிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது.

4. நிதியாண்டான 1984ஆம் ஆண்டின்போது எப்போதேனும் இச்சட்டத் திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள எவையேனும் முயற்சிகளிலிருந்து அரசாங்கம் பெறும் வரவுகள், அத்தகையமுயற் சியின் மீது அரசாங்கத்தினுல் உறப்பட்ட செலவினங்களுக்குப் போதியனவாயிரா விடின், அமைச்சர், அத்தகைய செலவினத்திற்கு அவசியமென அவர்கருதும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்துக்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறெதேனும் நிதியத்திலி ருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டுமெனக் காலத் துக்குக்காலம் கட்டளை மூலம் பணிக்கலாம். அவ்வாருயினும், அவ்வாறு

முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத்தொகைகளின் கூட்டுமொத்தத் தொகை, அந்த அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள அதன் நேரொத்த பதிவில் குறித்து ரைக்கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். அத்தகைய முயற்சி சம்பந்தமாக அவ்வாறு முற்பணமாகக் கொடுக் கப்பட்ட ஏதேனும் பணத்தொகை அமைச்சராற் கட்டளை மூலம் பணிக்கப்படக் கூடிய அத்தகைய முறையில் திரட்டு நிதியத்துக்கு மீண்டும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனுக அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப்பின் கீழும் தோன்றும் எந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும், மீண்டுவருஞ் செலவினத்திற்குப் பகிர்ந்தளிக் கப்பட்டிருந்து, ஆனல் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவுசெய்யப்படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலா ளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரின் கட்டளைமூலம், அந் நிகழ்ச்சித்திட்டத்திற்குட்பட்ட ஆக்கப்பொருட் செலவினத் திற்கெனச் செய்யும் பகிர்வுக்கு அல்லது அத்தலைப்பிற்குட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்வரும் மீண்டுவருஞ் செலவினம் அல்லது ஆக்கப்பொருட் செலவினம் என்ற பகிர்வுக்கு மாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின் கீழுள்ள நிகழ்ச்சித்திட்டமெதன் கீழும் ஆக்கப்பொருட் செலவுக்குப் பகிரப்பட்டுள்ள பணங்களெவையும் அப்பகிர்விலிருந்து வேறெதற்கும் மாற்றப்படல் ஆகாது.

6. (1) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் வரவுகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதிவசதியளிப்பதற்கென எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகைகளையும் விடக் குறைவாயிருக்கு மென, அல்லது

(2) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக் கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்பட மாட்டாவென,

அமைச்சர் திருப்திப்படுமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத் திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழான செலவினத்திற்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத்தொகை களை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப் பெறலாம்.

7. (அ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் II ஆம் நிரையிலும் IV ஆம் நிரையிலும் V ஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும்,

(ஆ) இச்சட்டத்திற்கான III ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைகளுள் எதனையும்,

அமைச்சர் அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு 1985 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளைமூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்.

அத்தகைய கட்டளை எதுவும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன்கண் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடியதும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதிக்கு முந்தியதுமான அத்தகைய தேதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படல்வேண்டும்.

8. பாராளுமன்றமானது, தீர்மானத்தின் மூலம் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையை, அவ்வட்டவணையின் தோதான நிரைகளுக்கு ஏதேனும் முயற்சியையும்,

(அ) அத்தகைய முயற்சி தொடர்பிலான எல்லா ஆகக்கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும்;

(ஆ) அத்தகைய முயற்சி தொடர்பிலான ஆகக்குறைந்த எல்லையையும்,

சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.

## 1983ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க, புனர்வாழ்வு அறவீட்டுச் சட்டம்

*[1983, திசெம்பர் மாதம் 29ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**1984ஆம் ஆண்டு சனவரி 1ஆம் தேதியன்று தொடங்கும் பஞ்சாங்க ஆண்டிற்காக குறித்துரைக்கப்பட்ட ஊழியர்கள்மீது புனர்வாழ்வு அறவிடு ஒன்றை விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

*1.* இச்சட்டம் 1983ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க, புனர்வாழ்வு அறவீட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* குறித்துரைக்கப்பட்ட ஊழியர் ஒவ்வொருவரிடமிருந்தும் 1984ஆம் ஆண்டு சனவரி மாதம் 1ஆம் தேதியன்று தொடங்கும் பஞ்சாங்க ஆண்டின் ஒவ்வொரு மாதத்திற்காகவும் (இதனகத்துப் பின்னர் ''அறவீடு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) புனர்வாழ்வு அறவீடொன்று, அம்மாதத்துக்கு அத்தகைய ஊழியரின் வேதனுதிகளினது ஒரு வீதம் என்ற விகிதத்தில் அறவிடப்படுதல் வேண்டும்.

*3.* குறித்துரைக்கப்பட்ட ஊழியர் ஒவ்வொருவரினதும் தொழில் தருநர், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஊழியரால் ஏதேனும் மாதத்திற்குச் செலுத்தப்படற்பாலதான அறவீட்டை, அத்தகைய அறவீடு எந்த மாதத்திற்குக் கொடுக்குமதியாகவிருக்கின்றதோ அந்த மாதத்தை உடனடுத்துப் பின்வரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும்.

*4.* குறித்துரைக்கப்பட்ட ஊழியரொருவரின் தொழில்தருநர் ஒவ்வொருவரும், 1984ஆம் ஆண்டு சனவரி 1ஆம் தேதியன்று தொடங்கும் பஞ்சாங்க ஆண்டிலுள்ள ஏதேனும் மாதத்தில் அத்தகைய ஊழியருக்குச் செலுத்தப்படற்பாலனவான வேதனுதிகளிலிருந்து, அம்மாதத்திற்கு அத்தகைய ஊழியரால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டைக் கழிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

5. குறித்துரைக்கப்பட்ட ஊழியரொருவரின் தொழில்தருநர், அத்தகைய ஊழியரால் ஏதேனும் மாதத்திற்குச் செலுத்தப்படற்பாலதான அறவீட்டை 3ஆம் பிரிவிற்கிணங்க உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தத் தவறுமிடத்து, அத்தகைய அறவீட்டுத்தொகை அத்தகைய தொழில் தருநரிடமிருந்து அறவிடப்படலாம். 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 107ஆம், 108ஆம், 109ஆம், 110ஆம் பிரிவுகளினதும் XXIஆம் அத்தியாயத்தினதும் ஏற்பாடுகள், அறவீட்டின் மதிப்பீடு, கொடுப்பனவு அறவிடுகை அத்துடன் அறவீட்டின் கொடுப்பனவிலான தவறுகைக்கான தண்டங்கள் என்பனவற்றுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

6. குறித்துரைக்கப்பட்ட ஊழியர் ஒருவரின் தொழில்தருநர் ஏதேனும் மாதத்திற்கு அத்தகைய ஊழியரால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டைச் செலுத்தி, ஆனால் அத்தகைய அறவீட்டுத் தொகையை, அம்மாதத்திற்கு அத்தகைய ஊழியரின் ஊதியங்களிலிருந்து கழிக்காதிருக்குமிடத்து, அத்தகைய அறவீட்டுத் தொகையானது —

(அ) 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அத்தகைய தொழில்தருநரின் இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயிக்கும் நோக்கங்களுக்காக ஒரு கழிப்பனவாக அனுமதிக்கப் படுதல் ஆகாது ; அத்துடன்

(ஆ) அச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஊழியரின் இலாபங்களையும் வருமானத் தையும் நிச்சயிக்கும் நோக்கங்களுக்காக அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் பாகமாகக் கருதப்படுதல் ஆகாது.

7. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அவரது ஊழியத்தில் குறித் துரைக்கப்பட்ட ஊழியர் ஒருவரைக் கொண்டிருக்கும் தொழில்தருநர் ஒவ்வொரு வரும், அவர் தமது ஊழியத்தில் அத்தகைய ஊழியரைக் கொண்டிருக்கின்ரு ரென 1984ஆம் ஆண்டு சனவரி மாதம் 15ஆம் தேதிக்குப் பிந்தாமல் உண்ணாட் டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(2) தொழில்தருநர் ஒருவர், இச்சட்டம் தொடங்கும் தேதியின் பின்னர் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஊழியரைத் தொழிலுக்கமர்த்தத் தொடங்கு மிடத்து, அவர், தமது ஊழியத்தில் அத்தகைய ஊழியரைக் கொண்டிருக்கின்ரு ரென அத்தகைய ஊழியம் தொடங்கியதிலிருந்து ஒரு மாத காலத்துள் ஆணை யாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(3) ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுக்குமாறு இப்பிரி வினல் தொழில்தருநர்மீது சுமத்தப்பட்ட தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறும் தொழில்தருநர் ஒவ்வொருவரும், அத்தகைய அறிவித்தல் கொடுக்குமாறு அவர் தேவைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஐயாயிரம் ரூபா தண்டமொன்று செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும். செலுத்தப்படாத ஏதேனும் தண்டப்பணத்தின் அறவீட்டிற்கு அத்தகைய தண்டம் இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான அறவீடொன்று என்ருற்போன்று, 5ம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்புடையனவாதல் வேண்டும்.

8. இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினலன்றி—

''உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி'' என்பது, 1979ஆம் ஆண் டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ளவாருன அதே பொருளைக் கொண்டதாகும் ;

''வேதனுதிகள்'' என்பது, குறித்துரைக்கப்பட்ட ஊழியரொருவர் தொடர் பாக, 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத் தின் 4ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் (அ)ஆம் உட்பந்தியில், குறிப்பீடு செய்யப்பட்டவாருக அவ்வூழியரின் ஏதேனும் ஊழியத்தி லிருந்து அல்லது முன்னைய ஊழியத்திலிருந்துவரும் அத்தகைய இலா பங்கள் எனப் பொருளாகும். ஆனல் அச்சட்டத்தின் 9ஆம் பிரிவின் 1ஆம் உட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியில் அல்லது (ஓ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாருன அத்தகைய ஏதேனும் படியை அல்லது எவையேனும் வேதனுதிகளை உள்ளடக்காது ;

''தொழில்தருநர்'' என்பது, 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட் டரசிறைச் சட்டத்தின் 113ஆம் பிரிவில் உள்ளவாருன அதேபொருளைக் கொண்டதாகும் ;

''குறித்துரைக்கப்பட்ட ஊழியர்'' என்பது, 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கருத்தெல்லேக் குள் ஏதேனும் ஊழியத்திலிருந்து அல்லது முன்னைய ஊழியத்திலிருந்து இலாபங்களைப் பெறுகின்றவரும் அத்துடன் —

(அ) அச்சட்டத்தின் 9ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்ட ஆளொருவராகவும் ; அல்லது

(ஆ) எந்த ஆள் தொடர்பில் 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியத்துக்கு அல்லது 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 31ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக அத்தகைய ஏதேனும் ஒழுங்குபடுத்தப்பட்ட சகாய நிதியத்துக்கு அல்லது உண்ணுட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியினுல் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத்துக்கு உதவுதொகையொன்று செலுத்தப்படற்பாலதோ அந்த ஆளொரு வராகவும் ; அல்லது

(இ) 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க. ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 10ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தின் பயனைக்கொண்டு எந்த ஆள் தொடர்பில் ஊழியர் சகாய நிதியத்துக்கு உதவுதொகையொன்று செலுத்தப்படற் பாலதல்லாதிருக்கின்றதோ அந்த ஆளொருவராகவும்; அல்லது

(ஈ) கம்பெனியொன்றின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் பணிப்பாளரொருவராகவும் அல்லது பங்காண்மையொன்றின் தொழில் பங்காளரொருவராகவும்,

இருக்கின்ற எவரேனும் ஆள் எனப்பொருளாகும். ஆனுல் இலங்கைப் பிரசையொருவர் அல்லாதவரும், 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் [1]ஆம் உட்பிரிவின் (இ) முதல் (ஏ) வரையிலான பந்திகளின்கீழ் அல்லது (ஒ) என்னும் பந்தியின்கீழ் அவரது ஊழியத்திலிருந்துவரும் இலாபங்கள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளவரும், அந்தச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர் அல்லாதவரும் ஆன எவரேனும் ஆளே உள்ளடக்காது.